கல்குடா கல்வி வலய வளநிலைய பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை க.பொ.த(உ\த) -2018

பொறியியற் தொழில்நுட்பவியல்

தரம்:13(2018)	தவணை:06	நேரம்:2 மணித்தியாலம்


சுட்டெண்\பெயர்..... புள்ளி.....

பொறியியற் தொழில்நுட்பம் - I

❖ **1-50 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் 1-5 என எண்ணிடப்பட்ட விடைகளுள் சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1) இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தின் போது ஏற்பட்ட தொழினுட்பவியல் அபிவிருத்தியின் விளைவாக அமையாதது.
   1. அதிக அளவு எரிபொருளை கொண்டு செல்வதற்கு ஜெரிக் கலம் உற்பத்தி செய்யப்பட்டது.
   2. ஜெற் எஞ்சின் உற்பத்தி செய்யப்பட்டது
   3. றேடார்த் தொழினுட்பவியலின் உருவாக்கம்
   4. அணுசக்தி தொழினுட்பவியலின் அபிவிருத்தி.
   5. நீரிலும் கொதி நீராவியிலும் சக்தியைப் பயன்படுத்தல்.


2) என்ஜின் ஒன்றின் தலையில் (Engine head) இருமுனைப் புரியாணித் துவாரங்கள் அமைந்துள்ள விதம் உருவில் காட்டப்பட்டுள்ளது. ஆணிகளை இளக்குவதற்குப் பொருத்தமான ஒழுங்கு முறையைத் தெரிவு செய்க.



   1. 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10
   2. 10, 1, 6, 8, 3, 9, 2, 7, 4
   3. 3, 8, 2, 9, 4, 7, 1, 10, 5, 6
   4. 8, 3, 7, 1, 9, 2, 6, 5, 10, 4
   5. 1, 6, 5, 10, 2, 7, 4, 9, 3, 8

3) மர அரிவு இயந்திரம் ஒன்றில் பிரயோகிக்கப்படும் இயக்க முறைகள் முறையே?
   1. நேர்கோட்டு இயக்கம் → வட்ட இயக்கம்
   2. வட்ட இயக்கம் → நேர்கோட்டு இயக்கம்
   3. வட்ட இயக்கம் → வட்ட இயக்கம்
   4. 1 மட்டும் சரி
   5. 2 உம் 3 உம் சரி

4) கீழ் உள்ளவற்றில் குதிமுள் பற்சக்கரத்தைச் (Spur gears) சரியாகக் குறிப்பது.




5) நெருக்கல் எரிபற்றல் எஞ்சினுக்கு உரியதாக அமையாத பாகத்தைத் தெரிந்தெடுக்க.
   1. உட்செலுத்தி (Injector)
   2. நெரி உடல் (Throttle Body)
   3. உள்ளெடுப்பு வால்பு (Intake Valve)
   4. வெளிப்படுத்தி வால்பு (Exhaust Valve)
   5. உட்பாய்ச்சிப் பம்பி (Injector Pump)

www.ikeduk

6) ஈரடிபப்பு தனி உருளை பெற்றோல் இயந்திரத்தில் முசலம் மேல் நோக்கி செல்லும்போது யாது நிகழும் ?
   1. பெற்றோல் வளிக்கலவை தகன அறைக்குள் புகும்
   2. பெற்றோல் வளிக்கலவை நெருக்கப்படுகின்றது
   3. இவை எவையும் நிகழாது
   4. 1 ஆம், 2 ஆம் விடைகள் பிழையானவை
   5. 1 ம் 2ம் விடைகள் சரியானவை

7) வரிப்படத்தில் காட்டியபடி OA = x ஆயின் முசலம் அசையும் தூரம் யாது?
   1. x 2. 3 x 3. 4 x 4. 2x 5. 5x




8) RPM இன் பரிமாணமாக அமைவது
   1. Hz 2. S 3. T 4. T 5. LT

9) எஞ்சின் குளிர்தல் தொகுதிக்கு உரியதாக அமையாத கூறு. (09)
   1. கதிர் வீசி 2. விசிறி 3. நீர்ப் பம்பி 4. மயிர்த்துளைக் குழாய் 5. வெப்ப நிறுத்தி

10) வாகனம் ஒன்றிற்கு மசகிடுதல் (lubrication) சம்பந்தமான பின்வரும் இரு கூற்றுக்கள் கருதுக.
   a. மசகிடுவதால் பாகங்களிற்கு இடையிலான உராய்வு குறைக்கப்படுகின்றது.
   b. மசகிடுவதால் வாகன எந்திரத்தில் ஏற்படும் வெப்பம் குறைக்கப்படுகின்றது. இவற்றில் சரியான கூற்று / கூற்றுக்கள்.
   1. a மட்டும் 2. b மட்டும் 3. a பிழை b சரியானது
   4. a உம் b உம் சரியானது 5. எதுவும் இல்லை

11) படத்தில் பின்வரும் பாகங்களை சரியாக குறிப்பிடும் இலக்கங்களைக் கொண்ட தொகுதி எது?
   A. - தொடக்க ஆளி B - காந்த ஆளி C - தாங்கிச் சுருள்
   1. 1, 2, 3
   2. 1, 4, 3
   3. 2, 4, 3
   4. 1, 2, 4
   5. 4, 1, 2



12) இரு கியர்கள் தொடுகையில் இணைத்து இயங்கும் போது
   A. அவற்றின் சுழற்சிகள் எதிர் எதிர்த் திசையில் இருக்கும்
   B. அவை ஒவ்வொன்றினதும் சுழற்சிக்கதியானது அவற்றின் விட்டத்திற்கு நேர்மாறு விகித சமன்
   C. சுழற்சிகதி பற்களின் எண்ணிக்கைக்கு நேர் விகித சமன் இவற்றுள் சரியான கூற்றுக்கள்?
   1. A உம் B உம் 2. B உம் C உம் 3. A மட்டும்
   4. A உம் B ம் C உம் சரி 5. யாவும் பிழை


13) ஒரு குறித்த பொறியில் ஒரு தட்டை வாரைப் பயன்படுத்தி மோட்டருடன் கியர் பெட்டி இணைக்கப்படுகின்றது. இத்தட்டை வார்ச் செலுத்தலைப் பயன்படுத்தி வலுவை ஊடுகடத்தும்போது
   A. மோட்டாருக்கும் கியர் பெட்டிக்குமிடையே ஒரு மாறா ஊடுகடத்தல் விகிதம் பேணப்படுகின்றது.
   B. வார் மிகை சுமை ஏற்றத்தின் விளைவாக உள்ள சேதத்தைக் குறைக்கின்றது.
   C. வாரின் அகலத்தைக் கூட்டுவதன் மூலம் வாரினால் ஊடுகடத்தப்படும் உயர்ந்தபட்ச வலுவை கூட்டலாம்.
   D. ஓர் உராய்வுக் கிளச்சு ஆற்றும் அதே தொழிலை வார்ச் செலுத்தல் செப்பமாக செய்கின்றது.
   மேற்குறித்தவற்றுள் சரியான கூற்றுக்கள்
   1. A,B ஆகியன மாத்திரம் 2. A,C ஆகியன மாத்திரம் 3. A,D ஆகியன மாத்திரம்
   4. B,C ஆகியன மாத்திரம் 5. C,D ஆகியன மாத்திரம்

www.ikeduk

14) ஆர்முடுகலின் போது எஞ்சின் தவறுகின்றது அதற்கு கிட்டிய காரணம்
1. கிளச் மிதி மிதிக்கப்பட்டிருக்கின்றமை
2. தடுப்பு தொகுதியில் வழு இருக்கின்றமை
3. காபன் சேர் கருவி தக்கவாறு அமைக்கப்படாமை
4. வால்வு வில் தக்கவாறு அமைக்கப்படாமை
5. வால்வு இழக்கம் அதிகமாக இருத்தல்

15) விசையூட்டல் சுற்றோட்ட உராய்வு நீக்க முறை நடைபெறுவது
1. புவியீர்ப்பின் மூலம் 2. ஓயில் பம்பியில் அமுக்கம் உருவாக்கப்படுவதன் மூலம்
3. சுழற்சித் தண்டின் தெறிப்பு மூலம் 4. மேற்கூறிய யாவும் சரி 5. மேற்கூறிய யாவும் பிழை

16) 0.01cm இழிவெண்ணிக்கையும் 0.7mm மறைப்பூச்சிய வலுவும் உடைய ஓர் வேணியர் கணிச்சியை பயன்படுத்தி அளந்த போது கருவி காட்டிய வாசிப்பு கீழே வரிப்படத்தில் காட்டப்பட்டுள்ளவை அப்பொருளின் நீளம் யாது?




1. 3.62mm 2. 36.3mm 3. 34.9mm 4. 3.56mm 5. 3.5 mm

17) கோலின் நேர் இயல்பை (Straitness) அளப்பதற்கு உகந்த கருவி (01)
1. நுண்மானி 2. வேணியர் இடுக்கி 3. முகப்புமானி
4. உணர்மானி 5. திருகாணி நுண்மானி (Micro meter)


18) B, C, E என்னும் வரைப்பாட்டுப் புள்ளிகளுக்கு அளவைக் கோடு AD இலிருந்து எடுக்கப்பட்ட செங்குத்து எதிரமைப்புகளைக் கொண்ட அளவையாளரின் புல ஏட்டுக்குறிப்பு கீழே தரப்பட்டுள்ளது. பல்கோணி வடிவ நிலம் ABCDEA இன் பரப்பளவு

1) 450m ^{2}
2) 500m ^{2}
3) 350m ^{2}
4) 600m ^{2}
5) 650m^2




19) மட்டம் காணல் (Levelling) செயன்முறையில் பெற்ற ஐந்து வாசிப்புக்கள் முறையே 0.450m, 1.700m, 1.460m, 0.660m, 0.750m ஆகும். இங்கு மூன்றாம் வாசிப்பை பெற்ற பின் மட்ட உபகரணம் முன்நோக்கி கொண்டு செல்லப்பட்டது. முதலாம் மட்டமாக்கல் இடத்தில் மாற்றிய உயரம் 106.50m எனின், ஐந்தாம் வாசிப்பு பெறப்பட்ட இடத்தின் மாற்றிய உயரம் யாது?
1) 105.20m 2) 105.15m 3) 105.40m 4) 106.90m 5) 107.50m

20) விட்டக்கல் (Lintel) (லின்டல்) மீது தொழிற்படும் உதைப்பானது சுமை மூலம் பிரயோகிக்கப்படுவதனை காட்டும் சரியான வரைபு என நீர் கருதுவது



21) மேற்படி கொங்கிறீட் வளை அமைப்பிற்கான வலியுறுத்திகள் அமைக்கப்பட வேண்டிய பகுதி




1. 
2. 
3. 
4. 
5. 

www.lkedu.lk

22) இழுவைக்கும் நெருக்கலிற்கும் தாக்குப்பிடிக்கும் மூட்டுவகை பின்வருவனவற்றுள் எது?
1. நெற்றி மூட்டு 2. மேற்கவிவு மூட்டு 3. புறாவால் மூட்டு
4. நாவா தவாளிப்பு மூட்டு 5. மைற்றர் மூட்டு


23) இலங்கையில் வீடுகளில் அடிப்பீடச் சுவரின் மேல் இடப்படும் ஈரம்புகாவரி மூலம் செய்யப்படும் தொழில்.
1. சுவரின் மூலம் பிரயோகிக்கப்படும் நிறையை அடிப்பீடச்சுவரின் மீது சமமாகப் பகிர்தல்
2. தரையின் ஈரலிப்பு மயிர்த்துளைமையின் மூலம் வீட்டினுள் புகுவதைத்தவிரத்தல்
3. சுவரையும், அடிப்பீடச் சுவரையும் நன்றாக ஒருமிக்கப்பிணைத்திருத்தல்
4. பக்கச் சுவரிலிருந்து வீட்டுக்குள் ஈரலிப்பு புகுவதை தடுத்தல்
5. கறையான், எறும்பு போன்றன மேல் ஏறாமல் தடுத்தல்

24) பின்வரும் செங்கல் கட்டுமானத்தில் சிலதகவல்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் பிழையான கூற்று எது?



1. A,B பிளமிசு கட்டுமானம் ஆகும்.
2. A,B ஆங்கிலக் கட்டுமானம் ஆகும்.
3. A,B இல் சுவரின் தடிப்பு 1B ஆகும்.
4. A,B ஆங்கிலக்கட்டின் அடுத்த அடுத்த வரிக்குரிய கிடைப்படங்கள் ஆகும்.
5. A,B இனை இணைத்து உருவாக்கும் சுவரின் நீளஅடைப்பு / கவிவு ஆனது செங்கல்லின் நீளத்தின் ¼ பங்கிற்கு சமமாகும்


25) பின்வரும் உருவில் ஒரு மரக் கூரைக் கட்டமைப்பு காணப்படுகின்றது.



இங்கு A, B, C, D எனக் குறிக்கப்பட்டுள்ள கூறுகள் முறையே
1) முகட்டு வளை, அரசிமல், இழுவை வளை, கைமரம்
2) அரசிமல், முகட்டு வளை, இழுவை வளை, கைமரம்
3) கைமரம், அரசிமல், முகட்டு வளை, இழுவை வளை
4) இழுவை வளை, அரசிமல், முகட்டு வளை, கைமரம்
5) இழுவை வளை, முகட்டு வளை, அரசிமல், கைமரம்

26) பின்வருவனவற்றுள் முடிப்பு முறைக்குப் (Finishing) பொருத்தமல்லாத ஒன்று
1) வெளி, உள் சுவர்க்காரை மீது தீந்தை பூசுதல்.
2) வீட்டுத் தளத்திற்கு தரை ஓடு பதித்தல்.
3) சிறந்த செங்கற்களைக் கொண்டு மறைப்புச் சுவர் அமைத்தல்.
4) மர உறுப்புக்களுக்குத் தீந்தை பூசுதல்.
5) மேற்கூறிய யாவும் பிழை.


27) அருகிலுள்ள உருவில் காட்டப்பட்டுள்ள உருவமானது
1) தவளைக்கல்
2) எருமை மூக்குக் கல்லு
3) இராசமுடி
4) இராணி முடி
5) மேற்சொன்ன எவையுமல்ல.




www.ikedu.lk

28) *கொங்கிறீட்டின் கீல அத்திவாரம் அமைக்கும் போது பின்வருவனவற்றுள் சரியானதும் பலமானதுமான முறை எது? (01)*


1)




2)




3)



4)




5)




29) ஒரு மீளவலுவூட்டிய கொங்கிறீற்றுத் தூணின் நெடும்பாட்டு வெட்டு உருவில் காட்டப்பட்டுள்ளது. A, B ஆகியன முறையே

1) கவிவு, சுயாதீன மூடுகை
2) சுயாதீன மூடுகை, கவிவு
3) ஏந்திகள், பிரதான மின்வலுவூட்டல்
4) பிரதான மின்வலுவூட்டல், ஏந்திகள்
5) ஏந்திகள், கவிவு



30)




அருகிலுள்ள காணியை Chain இல் அளந்தால் a, b, c முறையே

1) 80, 60, 100
2) 4, 3, 5
3) 20, 15, 50
4) 20, 15, 25
5) 2, 3, 5


31) நீர் சுத்திகரிப்பின் போது இடம்பெறும் படிமுறைகளின் ஒழுங்கினைக் கொண்ட தொகுதி

1) காற்றூட்டல், படியச் செய்தல், திரளச் செய்தல், வடித்தல், கிருமி நீக்கல்
2) காற்றூட்டல், கிருமி நீக்கல், திரளச் செய்தல், வடித்தல், படியச் செய்தல்
3) காற்றூட்டல், திரளச் செய்தல், படியச் செய்தல், வடித்தல், கிருமி நீக்கல்
4) திரளச் செய்தல், காற்றூட்டல், திரளச் செய்தல். வடித்தல், கிருமி நீக்கல்
5) திரளச் செய்தல். காற்றூட்டல், திரளச்செய்தல். வடித்தல், கிருமி நீக்கல்


32) பொருளொன்றின் சமவளவுத் தோற்றம் பின்வரும் உருவில் காட்டப்பட்டுள்ளது. X இன் திசையில் அவதானிக்கும் போதான சரியான தோற்றத்தைக் காட்டும் தெரிவு யாது? (மறைநிலைக் கோடுகளைக் கருதத் தேவையில்லை)



1.




2.




3.



4.



5.



www.kdu.lk

33) ஒரு கட்டடத்தின் பிரதான மின் பரப்பற் பலகையில் ஒரு தீ ஏற்படத் தொடங்கியுள்ளது. ஒரு கிட்டிய இடத்தில் நிறுவப்பட்டுள்ள சிவப்பு, கறுப்பு, நீலம் ஆகிய நிறங்களில் உள்ள தீயணை கருவிகள் உள்ளன. தீயை அணைப்பதற்குப் பயன்படுத்தபட வேண்டிய தீயணை கருவிகளின் நிறம் / நிறங்கள்

1. சிவப்பும் கறுப்பும் 2. சிவப்பும் நீலமும் 3. கறுப்பு மாத்திரம்
4. சிவப்பு மாத்திரம் 5. நீலமும் கறுப்பும்

34) *தரப்பட்ட சேர்மானத் தருக்கச் சுற்றின் பயப்புக்குப் பின்வரும் உண்மை அட்டவணைகளில் எது சரியானது?*



1)

A	B	Z
0	0	1
0	1	0
1	0	0
1	1	1

2)

A	B	Z
0	0	1
0	1	0
1	0	1
1	1	1

3)

A	B	Z
0	0	1
0	1	1
1	0	1
1	1	1

4)

A	B	Z
0	0	0
0	1	1
1	0	1
1	1	1

5)

A	B	Z
0	0	1
0	1	1
1	0	0
1	1	0

35) நிலைமாற்றி ஒன்றின் முதன்மைச் சுற்றிக்கு படத்தில் காட்டியவாறு சுற்று A,B யில் முறையே ஆடல்ஓட்ட, நேரோட்ட 50v மின்இயக்கசக்தி கொண்ட மின்முதல்கள் வழங்கப்படுகிறது. சுற்று A,B யின் துணைச் சுற்றில் உள்ள மின் அழுத்த வேறுபாடு V2 இனைச் சரியாகத் தருவது?

1) 500V, 500V 2) 500V, 0V 3) 0V, 500V 4) 1000V, 1000V 5) 1000V, 0V

36) தூண்டிகள் பற்றிய பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - தூண்டியின் தூண்டற்றிறன் ஹென்றி (H) இல் அளக்கப்படும்.

B - தூண்டியினூடாக நேரோட்டத்தைப் பிரயோகிக்கும் போது தூண்டிய வோல்ற்றளவு உண்டாகிறது.

C - தூண்டியினூடாக ஆடலோட்ட வோல்ற்றளவை வழங்கும்போது தூண்டல் தாக்குதிறனானது வழங்கல் அதிர்வெண்ணுக்கு விகிதசமனாகும். இக்கூற்றுக்களில் சரியானது / சரியானவை (06)

1) A மாத்திரம் 2) B மாத்திரம் 3) A,C ஆகியன மாத்திரம்
4) A,B ஆகியன மாத்திரம் 5) A,B,C ஆகிய எல்லாம்

37) P-N சந்தியின் P - வகைக் குறை கடத்தியிலும் N - வகை குறை கடத்தியிலும் உள்ள சிறுபாண்மைக் காவிகள்


1. துளைகள், இலத்திரன்கள் 2. இலத்திரன்கள், துளைகள் 3. இலத்திரன்கள், இலத்திரன்கள் 4. நேர் மின்னேற்றம், மறை மின்னேற்றம் 5. மறை மின்னேற்றங்கள், நேர் மின்னேற்றங்கள்

38) அரை அலை சீராக்கி சுற்று ஒன்றிலே பயன்படுத்தும் சீராக்கிகளின் எண்ணிக்கை (09)

1. 5 2. 4 3. 3 4. 2 5.1

39) *படத்தில் காட்டியுள்ள சுற்றில் செனர் இருவாயி ஊடான மின்னோட்டம் யாது? (09)*

1. 20mA
2. 25mA
3. 15mA
4. 5mA
5. 30mA



40) ஒரு மின்குமிழ் 24V என்னும் ஒரு நேரோட்ட வழங்கலுடன் தொடுக்கப்பட்டுள்ளது. அதனை ஏறத்தாழ 5 நிமிடங்களுக்கு ஒளிரச்செய்த பின்னர் அதன் முடிவிடங்களுக்கிடையே உள்ள தடை 288Ω இருக்கக் காணப்பட்டது. குமிழின் வலு

1. 1W 2. 2W 3. 4W 4. 8W 5. 20W

www.kcet.lk

41) வீட்டு மின் சுற்றுக்கு மின்னை வழங்கும்போது

A. பிரதான தானியங்கி B. பிரதான ஆளி C. சிறு சுற்றுடைப்பான் D. வாற்று மணித்தியாள மாணி E. இடறு ஆளி

எனும் பிரதான உபகரணங்கள் தொடுக்கப்பட வேண்டிய ஒழுங்குமுறை யாது?


1. A,B,C,D,E 2. A,B,D,C,E 3. A,D,B,E,C 4. A,D,E,B,C
5. D,A,E,C,B

42) 220Ω பெறுமானம் கொண்ட தடையின் நிறப்பரிபாடை

1. சிவப்பு, கபிலம், கபிலம் 2. சிவப்பு, சிவப்பு, கபிலம் 3. கபிலம், கபிலம், கறுப்பு
4. சிவப்பு, சிவப்பு, கறுப்பு 5. கறுப்பு, சிவப்பு, சிவப்பு


43) *அருகிலுள்ள சுற்றில் மின் ஓட்டம் I இன் பெறுமானத்தை தருவது. (01)*

1. 25mA *2.* 2.5mA *3.* 2.5μA *4.* 25μA *5.* 2.5A




44) படத்தில் காட்டப்பட்டுள்ள விரியலாக்கி 80 000 நயம் உடையது V_{in} = 0.2V எனின் V_{out} இன் பெறுமதி

1. 0.2 V
2. 0.4V
3. 0.6V
4. 0.8V
5. 1600V



45) அருகிலுள்ள அலையானது வகை குறிப்பது?

1. FM அலை
2. AM அலை
3. இலக்கச் சைகை அலை
4. கடிகாரத்துடிப்பு அலை
5. மட்டிசைக்கப்படாத காவி அலை






46) *அருகிலுள்ள குறியீடு குறிப்பது? (05)*

1. Zenor *2.* Varactor
3. Photo diode *4.* LED
5. Signal Diode



47) இருவழி ஒரு முனைவு ஆளியின் வீட்டு நிர்மாண வரைபடங்களில் பயன்படுத்தப்படும் குறியீடுகளில் சரியானது

1. 
2. 
3. 
4. 
5. 

www.ikedu.lk

48) இலங்கையில் அமைப்புத் துறையில் பயன்படுத்தப்படும் நியமங்கள் ICTAD, SLS ஆகிய நிறுவகங்களினால் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கேற்ப பின்வரும் கூற்றுக்களில் பிழையான கூற்று எனநீர்கருதுவது

1. SLS - 107 க்கு அமைவாக OPC சீமெந்து தயாரிக்கப்படுகின்றது. இச் சீமெந்து காலாவதியாகும் காலம் 3 மாதம் ஆகும்.
2. SLS- 573 அமைவாக கட்டட கணியங்கள் எடுக்கும் போது கதவுகள், யன்னல்கள் நீள மீற்றரில் (Lmt) எடுக்கப்படுகின்றன.
3. SLS- 147 அமைவாக UPVC குழாய்கள் தயாரிக்கப்படும் பொழுது Type 1000 என்பது அது தாங்கும் அமுக்கம் K.P களில் ஆகும்.
4. SLS-39 நியமத்துக்கு தக்கவாறு செங்கல்லின் நெருக்கு தகைப்பு 10N/mm2 ஆகும்
5. SLS-436 அமைவாக வரைதல் கடதாசி A2 ன் அளவு mm இல் 520 x 494 ஆகும்.

49) முயற்சியாண்மையுடன் தொடர்புபட்ட சில கூற்றுக்கள் கீழே காணப்படுகின்றன.
யு. கூட்டு முயற்சி வியாபாரத்தின் முயற்சியாளர்கள் அதன் பங்காளர்களாவர்
டீ. கூட்டுறவுச் சங்கத்தின் முயற்சியாளர்கள் அதன் உறுப்பினர்களாவர்
ஊ. அரசக் கூட்டுத்தாபனத்தின் முயற்சியாளராக இலங்கை மத்திய வங்கி செயற்படுகிறது
னு. ஒரு வரையறுத்த கம்பனியின் முயற்சியாளர் அதன் நிருவாகக் குழவின் உறுப்பினராவர்
மேற்குறித்த கூற்றுகளிடையே உண்மையானது.

1. A,B ஆகியன மாத்திரம் 2. A,C ஆகியன மாத்திரம் 3. B,C ஆகியன மாத்திரம்
4. B,D ஆகியன மாத்திரம் 5. A,B,C,D ஆகியன மாத்திரம்

50) பின்வரும் கூற்றுகளில் முயற்சியாளரின் எதிர்பார்பபை மிகச்சரியாகக் காட்டும் கூற்று யாது?

1. வியாபார விருத்தி பற்றிய அறிவையும் உயர் நிதி அனுகூலங்களையும் பெறுவதற்கு நடவடிக்கையை மேற்கொள்ளல்
2. தடைகளையும் இடர்பாடுகளையும் வென்றுகொண்டு முன்னோக்கிச் செல்லல்
3. பொருள், சேவை உற்பத்தியில் புதிய தொழினுட்பவியலை அதற்கு இசைவாக அமைத்தலும் பிரயோகித்தலும்
4. சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒருவரின் புத்தாகக்வியல்பு உட்படக் கருத்துகளுக்கு மதிப்பளித்தல்
5. பிரச்சினைகளைத் தீர்த்தலும் தீர்மானங்களை மேற்கொள்ளலும்

(3X50=150 புள்ளிகள்)

www.ikeuti.lk